**R1364 (page 43)** [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# கிருபையான அழைப்பு

## THE GRACIOUS CALL

அழைப்பிற்குச் செவிகொடுத்தவர்களுக்கு வரும் ஜீவன்பற்றின வாக்குத்தத்தத்தையும் தாண்டி, இன்னுமாக இந்த ஈவை விசுவாசத்தின் மூலம் பெற்றுக்கொள்வதினால் வரும் இப்போதுள்ள திருப்தியையும் தாண்டி, ஒரு விசேஷித்த வாக்குத்தத்தம் கொடுக்கப்படுகின்றது; அது: "தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்" என்பதாகும் (தமது நேசகுமாரனுக்குச் சொந்தமான மற்றும் நிச்சயமான பரிசுத்த வாக்குத்தத்தங்களில், அவர்கள் பகிர்ந்து கொள்வார்கள் என்று அவர்களுடன் ஓர் உடன்படிக்கையினைத் தேவன் செய்வார் - அது வரவிருக்கும் உலகத்தின் இராஜ்யம், வல்லமை மற்றும் மகிமை பற்றியதாகும்" (ஏசாயா 55:3). தாவீது என்ற பெயருக்கான அர்த்தம் "பிரியமானவன்" ஆகும்; இது நமது கர்த்தரை, தேவனுடைய நேசகுமாரனைக் குறிக்கின்றது என்று அப்போஸ்தலன் சுட்டிக்காண்பிக்கின்றார் (அப்போஸ்தலர் 13:33-34). இவ்விடத்தில் இடம்பெறுவதுபோல, "தாவீது எனும் பெயர். "சிலசமயங்களில் தேவனுடைய நேசகுமாரனைச் சுட்டிக்காட்டுவதற்கு என்று தீர்க்கத்தரிசனத்தில் மாத்திரம் பயன்படுத்தப்படாமல், சங்கீதம் 22:1, 17-18-ஆம் வசனங்களில் காணப்படுவதுபோன்று, தாவீதுதாமே அடிக்கடி நமது கர்த்தருக்கு நிழலாகக் காண்பிக்கப்படுகின்றார். இதுவுமல்லாமல் நமது கர்த்தருக்கு உரியது என்றும், அவரோடுகூட பங்கடையும்படிக்கு சுவிசேஷயுகத்தில் நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்றும் இங்குக் குறிப்பிடப்பட்டிருக்கும் இந்த "நிச்சயமான கிருபைகள்" அல்லது பரிசுத்தமான வாக்குத்தத்தங்கள், தாவீது இராஜாவுக்குப் பண்ணப்பட்டது (2 சாமுயேல் 7:8-16); இந்த வாக்குத்தத்தத்தின் பொருள் கிறிஸ்துவைப்பற்றியதாக இருப்பினும், நிச்சயமாகவே இதற்குப் பகுதியளவில் சொல்லர்த்தமான நிறைவேறுதலும் காணப்பட்டிருக்கும்.

(கிறிஸ்துவுக்கு) தாவீதுக்கு அருளப்பட்ட இந்த நிச்சயமான கிருபைகள் அல்லது பரிசுத்தமான காரியங்கள் சங்கீதம் 89:20-37 வரையிலான வசனங்களில் தெளிவாய் முன்வைக்கப்பட்டுள்ளன:

(1) கர்த்தர், இவரை மகா இராஜாவாக அபிஷேகம்பண்ணுவார் என்றும், இவரது சிங்காசனத்தை என்றென்றும் - அதாவது சூரியனும், சந்திரனும் காணப்படுவதுவரையிலும் ஸ்திரப்படுத்துவார் என்றும் சொல்லப்பட்டுள்ளது; (2) இவரை எந்தச் சத்துருவும் ஒடுக்குவதில்லை, மாறாக அனைவரும் இவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டிருப்பார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது; (3) பூமியின் குடிகள் யாவரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்ற தேவனுடைய உடன்படிக்கையை இவர் நிலைநிறுத்துவார் அல்லது இவரது ஆளுகையில் நிறைவேற்றப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது; (4) (மீட்பின் காரணமாகவும், மறுஜென்மத்தின் காரணமாகவும் வரும்) இவரது பிள்ளைகள் நீதியில் சீர்ப்பொருத்தப்படுவதற்கும், ஸ்திரப்படுத்தப்படுவதற்கும் அவசியமான, சீர்த்திருத்தத்திற்கடுத்த பயிற்சிகள்/சிட்சைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்வார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது; (5) யார் விருப்பமும், கீழ்ப்படிதலுமுள்ளவர்களாகக் காணப்பட்டு சீர்த்திருத்தத்திற்கடுத்த பயிற்சிகளினால்/சிட்சைகளினால் நன்மைகள் அடைகின்றார்களோ, அவர்கள் என்றென்றும் நிலைத்திருப்பார்கள் - இப்படியாக அவர் தம்முடைய ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாய் இருப்பார் என்று சொல்லப்பட்டுள்ளது.